**சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.**

**அ.வ எண் 106/2011**

| | |
|---|---|
| பெயர் | .. கார்த்திக்(வாசா 2) |
| த/பெ. க/பெ | .. |
| கிராமம் | .. |
| தாலுகா | .. |
| தொழில் | .. |
| வயது | .. |

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2026 ஆண்டு ஜீன் மாதம் 16 ம் நாள் இந்நீதிமன்ற நிலை II பலகை எழுத்தர் அருணா ரூபாவதி அவர்களால் மேற்படியாரிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டது.

.

**<u>முதல் விசாரணை:</u>**

எனது பெயர் கார்த்திக். நான் மேற்படி முகவரியில் குடியிருக்கிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பாணை வந்தது. அதன்படி இன்று ஆஜராகியுள்ளேன். நான் கோவில்பட்டி நகர சார் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.19.10.2024 தேதியில் தாவாப்படும் சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையீட வந்த போது நானும் உடன் இருந்தேன். அவர் குறிப்பிட்ட சொத்துக்களை அளந்து காட்டினேன். 20.10.2024 தேதியில் மேற்படி அளவீடு சம்பந்தமான வருவாய் ஆவணங்களை மேற்படி நீதிமன்ற ஆணையரிடம் ஒப்படைத்தேன். என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையர் அறிக்கையுடன் நான் கொடுத்த வரைபடங்கள் உள்ளது என்றால்

சரிதான். TS No. 56/1க்குரிய நகர அளவை வரைபடம் நான் கொடுத்துள்ளேன். அந்த அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது. அந்த வரைபடத்தின் படி கிழமேல் வட பக்கம் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி 5 அடி முதுலில் அளந்து காண்பித்தேன். அதற்கு அடுத்து 63.1 அடி அளந்து காண்பித்தேன். அதற்கு அடுத்து ஒரு தென்வடல் சுலர் இருப்பதாக எனது வரைபடத்தில்காட்டியுள்ளேன். அந்த சுவருக்கு கீழ்புறம் கீழமேல் வடதலை 10 அடி 11 11 அங்குலம் அளந்து காண்பித்தேன். ஆக மொத்தம் கிழமேல் 79 அடி என எனது வரைபடத்திடல் காண்பித்துள்ளேன். கிழமேல் தென்பக்கம் முதலில் 5–1/4 அடி அளந்து காண்பித்தேன். அதன் பின்னர் 66–3/4 அடியும், அதற்கு அடுத்து 7 அடியும் அளந்து காண்பித்தேன். ஆக மொத்தம் 79 அடி கிழமேல் தென்தலை அளந்து காண்பித்தேன். வரைபடத்தில் தென்வடல் 76 அடி அளந்து காட்டினேன். அதற்கு கீழ்புறம் தென்வடல் 79 அடி அளந்து காட்டினேன். அதற்கு கீழ்புறம் தென்வடல் 82 அடியும், அதற்கும் கீழ்புறம் 83 அடியும் இருந்தது அளந்து காண்பித்தேன். மேற்படி அளவுகள் TS.No. 56/1ல் அடங்கும். TS.No. 56/1 மேற்கில் தென்வடல் மந்திதோப்பு செல்லும் சாலை உள்ளது. நகர அளவை ஆவணங்களின்படி அந்த இடம் சாலை என பதிவாகியுள்ளது. மந்திதோப்பு சாலைா என்பது கோவில்பட்டி – எட்டையபுரம் சாலையில் இருந்து பிரிந்து தெற்கு நோக்கி சுமார் 3 கீமீ துாரம் வரை அமைந்துள்ளது என்றால் சரிதான். கோவில்பட்டி – எட்டையபுரம் சாலையில் இருந்து பிரியும் மந்திதோப்பு சாலை என்பது ஆரம்பத்தில் 4.8 மீட்டர் என உள்ளது, அதன்பின்னர் அந்த சாலை நேராக அமையாமல் வலைந்து வலைந்து உள்ளதால் சாலையின் அகலம் இடத்திற்கு இடம் மாறுபட்டு காணப்படுகிறது. மந்திதோப்பு சாலையை அளந்து அதை கழித்துவிட்டு தான்

TS No. 56/1 சொத்தை அளந்தோம் என்றால் மெட்ரிக் அளவுகளின்படி மட்டுமே அளக்கப்பட்டது. TS No. 56/1 க்கு பழைய சர்வே எண். 603/1pt ஆகும். அது என்னிடம் காட்டப்படும் ஆணையர் வரைபடத்துடன் இணைக்கப்பட்ட ஆவணத்தில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.1 ஆவணம் என்பது சர்வே எண். 603/1க்குரியது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் மந்திதோப்பு சாலை காண்பிக்கப்பட்டுள்ளது. அந்த சாலையின் சர்வே எண். 604 என காட்டப்பட்டுள்ளது. பி.சா.ஆ.1ன் படி சாலையின் அகலம் 21லிங்ஸ் என காட்டப்பட்டுள்ளது. 21லிங்ஸ் என்பது 4.2மீட்டர் ஆகும். பி.சா.ஆ–1 ல் மேற்படி சாலையின் அகலம் ஒவ்வொரு இடத்திலும் மாறுபட்டு காணப்படுகிறது என்றால் சரிதான். மந்திதோப்பு சாலையை விரிவாக்கம் செய்வது சம்பந்தமாக வருவாய் துறை ஆவணங்களில் எந்த ஒரு விவரமும் துலங்கவில்லை.

<u>குறுக்கு விசாரணை</u>:

கோவில்பட்டி – எட்டையபுரம் சாலையில் இருந்து மந்திதோப்பு செல்லும் சாலையின் தொடக்கம் கிழமேலாக 4.8மீட்டர் அகலம் உள்ளது. அது மங்கல விநாயகர் கோவில் அருகில் உள்ள இருந்து தொடங்கும் பகுதியாகும். நீதிமன்ற ஆணையரிடம் நான் வழங்கிய வரைபடத்தின்படி TS No. 58க்கு வடக்கே TS No. 56 உள்ளது என்றால் சரிதான். நான் கொடுத்த வரைபடத்தில் TS No. 56/1 என இல்லை என்றாலும், TS No. 56 என்று மட்டுமே உள்ளது என்றாலும் சரிதான். நீதிமன்ற ஆணையரிடம் நான் வழங்கிய அறிக்கையில் TS No. 56 சொத்தை அளந்ததாக மட்டுமே குறிப்பிட்டுள்ளேன் என்றாலும், TS No. 56/1 சொத்தை அளந்ததாக குறிப்பிடவில்லை என்றாலும் சரிதான். TS No. 56க்கு வடக்கே கிழமேலாக

145.4 மீட்டர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தில் அளவுகள் லிங்ஸ் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.1ல் சர்வே எண். 603/1ல் A புள்ளியிலிருந்து B புள்ளிவரை 738 லிங்ஸ் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.1ல் காட்டப்பட்டுள்ள மந்திதோப்பு சாலையின் கிழமேல் அகலம் 21 லிங்ஸ் என்று காட்டப்பட்டுள்ளது 4.2 மீட்டர் என்றால் சரிதான். A புள்ளியிலிருந்து B புள்ளிவரை காட்டப்பட்டுள்ள 738 லிங்ஸ் அளவு என்பது 148.4 மீட்டர் என்றால் சரிதான். பி.சா.ஆ.1 வரைபடத்திற்கும் நான் ஆணையர் அறிக்கையுடம் தாக்கல் செய்துள்ள வரைபடத்திற்கும் கிழமேலாக வடபக்கம் 3 மீட்டர் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 603 என்பது வருவாய் துறை பழைய சர்வே எண் ஆகும். நகர அளவையின் போது TS No. 56 என தாக்கலாகியுள்ளது. ஆணையரிடம் நான் கொடுத்த வரைபடம் என்பது நான் வரைந்ததா அல்லது ஏற்கனவே உள்ள வரைபடத்தை நகல் எடுத்து கொடுத்தேனா என்றால் நான் பழைய வரைபடத்தை ஒப்பீடு செய்து கைப்பட வரைந்த வரைபடம் ஆகும். நான் கொடுத்த வரைபடத்தில் TS No. 56/1 என குறிப்பிட்டு 145.4 மீட்டர் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த வரைபடத்தில் மேற்கில் இருந்து கிழக்காக வடபக்கம் X குறியீடு செய்யப்பட்ட பகுதியில் இருந்து கிழக்கே 5 அடி. அதேபோல் தெற்கே 5–1/4 அடி பகுதியானது அசல் வழக்கின் வாதிகளுக்கு உடமைப்பட்டது என்றால் சரிதான். நகர அளவை ஆவணங்களின்படி நகர அளவை மேற்கு பக்க எல்கை நிர்ணயம் செய்யப்பட்டு அதிலிருந்து அளந்து பார்க்கும் போது மேற்படி பகுதி வாதிகளுக்கு உடமைப்பட்டது என நான் குறிப்பிட்டுள்ளேன். மந்திதோப்பு சாலையில் இருந்து லெனின் நகர் செல்லும் சாலையில் வாதிகள்

ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்றால் சிறு பகுதியை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். தாவாப்படும் சொத்தின் மேற்கு பக்கம் உள்ள மந்திதோப்பு சாலையின் கிழமேல் அகலம் அளந்து பார்க்கப்பட்டதா என்றால் அளந்து பார்க்கப்பட்டது. அந்த சாலையின் கிழமேல் வடதலை 8.2 மீட்டர் இருந்தது. அந்த சாலையின் கிழமேல் தென்தலை 7.3 மீட்டர் என்றால் பூமியில் அவ்வாறு தான் உள்ளது. நான் குறிப்பிடும் மேற்படி கிழமேல் வடதலை, தென்தலை அளவுகள் பற்றி நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் எனக்கு தெரியாது. கோவில்பட்டி 1970 க்கு முன்பாக ஊராட்சியாக இருந்தது என்றால் சரிதான். 1977 வருடம் ஆரம்பத்தில் கோவில்பட்டி நகராட்சியாக மாறியது என்றால் சரிதான். நகராட்சியாக மாற்றப்பட்ட காலத்தில் மந்திதோப்பு சாலை விரிவாக்கம் செய்யப்பட்ட காரணத்தினால் பி.சா.ஆ.1 வரைபடத்திற்கும் நான் தாக்கல் செய்துள்ள வரைபடத்திற்கும் 3 மீட்டர் அளவு வித்தியாசம் உள்ளது என்றால் வித்தியாசம் உள்ளது. ஆனால் மந்திதோப்பு சாலை விரிவாக்கத்திற்காக அந்த வித்தியாசம் ஏற்படவில்லை. நகர அளவை உட்பிரிவு அடிப்படையில் TS No. 56/1 என குறிப்பிட்டுள்ளேன். நான் கொடுத்த வரைபடத்தில் கிழமேலாக 10 அடி 11 அங்குலம், அதில் தென்பக்கம் 7 அடி என குறிப்பிட்டுள்ள பகுதிக்கு மேற்கே தென்வடலாக காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி வீட்டிற்கு மேற்கே 15 அடி அகல ஒரு சந்து உள்ளதாக நான் வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தென்பக்கம் 5–1/4 அடி என குறிப்பிட்டுள்ள பகுதிக்கு மேற்கே X என குறியீடு செய்யப்பட்டுள்ள பகுதி சர்வே கல் ஆகும். வடகிழக்கு மூலையில் இருந்து அளவீடு செய்யும்போது 145.4 மீட்டர் என குறிப்பிடுவதற்கு எந்த அடிப்படையில் அளவு நிர்ணயம்

செய்யப்பட்டது என்றால் அதன் வடபுறம் சர்வே எண். 42ல் தென்கிழக்கு மூலையில் இருந்த நிர்ணயம் செய்யப்பட்டது.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.